1995 ஏப்ரல் 19]

357—

பத்தமடை கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***25245—**திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம், நாங்குனேரி, சாத்தான்குளம் ஆகிய தொகுதிகள் பயனடைய தாமிரபரணிக் கூட்டுக் குடிநீர் பத்தமடைத் திட்டத்திற்கு அரசின் தொழில் நுட்ப அனுமதி கிடைத்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 358, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

358—

மேலவன்னியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***21650—**திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரில் உள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், மேலவன்னியூரிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தி 10-11-1994 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபோது, அங்கே உயர்நிலைப்

பள்ளியாக இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் நேரடியாக கோரிக்கை வைத்தவுடனே மாணவர் மாணவிகளின் அவசியம் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு உடனே மேல்நிலைப் பள்ளியாக உருவாக்கினார். இப்பள்ளிக்கு மாணவர் விடுதி வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடனே மாணவர் விடுதி ஒன்று துவக்கினார்கள். அத்துடன் மாணவர் விடுதிக்கு ரூபாய் 25 லட்சம் பணம் ஒதுக்கி தற்போது கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இருக்கும்போதே அவசியம் கருதி கூடுதல் கட்டிடம் வேண்டுமென கோரிக்கை வைத்தேன். தற்போது ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதுவரையில் எந்த அரசும் செய்ய முன்வராத கோரிக்கைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தான் மக்கள் கோரிக்கைகளை தங்களின் சாதனைகளாக ஆக்கி செய்து முடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஆட்சியில் அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகித வெற்றியை பெற்றுத் தந்துள்ள அப்பள்ளி தற்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளதால் அப்பள்ளிக்கு மீண்டும் ஒரு கூடுதல் கட்டிடம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிறைய கொடுத்திருக்கிறோம். மேலும் கேட்கின்ற இந்தச் சூழ்நிலையில், இதுபோன்று பல பள்ளிகள்-தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1225 பள்ளிகள்-இருக்கின்றன. அதையும் கருத்தில் கொண்டு நிதிநிலையையும் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

359—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் மீனவர்கள் குடியிருப்பு கட்டுதல்

***33151—**திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—